1971 ஜூலை 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கடிதப் போக்குவரத்து மூலமாக ஏற்படுத்துகின்ற பட்டப் படிப்புக்கு ஃபீஸ் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைப் பற்றிப் புனர் பரிசீலனை செய்து ஃபீஸைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகந்தான் இதை வகுத்திருக்கிறார்கள். அதற்காகும் செலவு மற்றவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து முறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். கடிதப் போக்குவரத்து முறையில் பாடங்களை எல்லாம் அச்சடித்துப் புத்தக வடிவில் அனுப்புவதற்கு ஆகும் பெருஞ் செலவு எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு பல்கலைக் கழகம் அதை நிர்ணயித்திருக்கிறது.

டெலிவிஷன் மூலம் கல்வி

* 389 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் டெலிவிஷன் மூலம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

செஞ்சிக் கோட்டையைப் புதுப்பித்தல்

* 390 வினு—திரு. ரா. ரா. முனுசாமி : ம''ண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சிக் கோட்டை பழுதடைந்திருப்பதால் அதைப் புதுப்பிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : செஞ்சிக்கோட்டை தேசிங்குராஜன் ஆண்ட பழைய வரலாற்றைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்தக் கோட்டையில் இப்போது மத்திய சர்க்கார் பணியாளர்களைப் போட்டு உள்ளே செல்லுகின்றவர்களுக்குக் கட்டணம் வசூலிக்கிறார்கள். பண்டைக் காலத்து வரலாற்றைக் காட்டும் வகையில் அமைந்திருக்கின்ற அந்தக் கோட்டையைப் புதுப்பித்து பயணிகள் தங்கும் அளவுக்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைப்பதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செஞ்சிக் கோட்டையை மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதடைந்ததைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டதில் அந்தக் கோட்டை பழுதடையவில்லை யென்றும் அது ஓரளவு நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது